# EASTERN UNIVERSITY, SRI LANKA

## EXTERNAL DEGREE PROGRAMME

## FACULTY OF COMMERCE AND MANAGEMENT

## FIRST YEAR - SECOND SEMESTER EXAMINATION IN BACHELOR OF BUSINESS MANAGEMENT (BBM) 2019/ 2020 (JANUARY/FEBRUARY 2024)

## (PROPER/ REPEAT)

## BMS 1042 CAPITAL AND MONEY MARKET

**Answer all questions** **Time: 02 Hours**

---

01. 2024 சனவரி 23ஆம் திகதி ஏலவிற்பனையினூடாக 130,000 மில்லியன் ரூபாவுக்கான திறைசேரி உண்டியல்கள் வழங்கப்படுமென வெளியீடப்பட்ட சந்தை அறிவித்தலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட தகவல்கள் பின்வருமாறு.

**இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு**
**திறைசேரி உ ண்டியல்கள் வழங்கல்**

ரூ. 130,000 மில்லியனுக்கான திறைசேரி உண்டியல்கள் 2024 சனவரி 23ஆம் திகதி ஏலவிற்பனை ஊடாக வழங்கப்படும்

திறைசேரி உண்டியல் வழங்கல்களின் விபரங்கள் பின்வருமாறு.

| முதிர்வுக் காலம் | 91 நாட்கள் | 182 நாட்கள் | 364 நாட்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஐஎஸ்ஐஎன்* | LKA09124D266 | LKA18224G266 | LKA36425A245 | |
| முன்வைக்கப்பட்ட தொகை (ரூ.மில்.) | 30.000 | 70,000 | 30,000 | 130,000 |

மேலே தரப்பட்ட தகவலிருந்து கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.

அ. விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் என்ன?

(02 புள்ளிகள்)

ஆ. இவ் ஏலவிற்பனையின் தீர்ப்பனவுத் திகதி எது?

(02 புள்ளிகள்)

இ. முதனிலை வணிகர் ஒருவரினால் சமர்ப்பிக்கப்படும் விலைக்குறிப்பீட்டின் ஆகக் குறைந்த தொகை எவ்வளவு?

(02 புள்ளிகள்)

ஈ. முதனிலை வணிகர்களின் பட்டியலிலுள்ள பதிவுசெய்யப்பட்ட ஐந்து (05) வணிகர் நிறுவனங்களை குறிப்பிடுக.

**(05 புள்ளிகள்)**

உ. 91 நாட்களில் முதிர்வடையும் திறைசேரி உண்டியல்களின் வருடாந்த விளைவு வீதம் 13.35% ஆகவும் உண்டியலின் பெயரளவுப் பெறுமதி 100 ஆகவும் இருக்கும் போது இந்த உண்டியலின் விலையாது?

**(05 புள்ளிகள்)**

ஊ. “முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்கள் இரண்டாந்தரச் சந்தையில் முதனிலை வணிகர்களிடமிருந்தும் அல்லது ஏதேனும் வேறு உரிமம்பெற்ற வங்கியிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்யலாம்.” திறைசேரி உண்டியல்கள் வழங்கப்படுமென வெளியீடப்பட்ட சந்தை அறிவித்தலில் மேலே உள்ள கூற்று குறிப்பிடப்பட்டுள்ளது. இங்கு குறிப்பிடப்படும் இரண்டாந்தரச் சந்தை பற்றி விளக்குக.

**(09 புள்ளிகள்)**

**(மொத்த புள்ளிகள் 25)**

02. அ. இலங்கையில் நிதி நிறுவனக் கட்டமைப்பினை விபரிக்க.

**(08 புள்ளிகள்)**

ஆ. வணிகங்களின் வெற்றிக்கு மத்திய வங்கியின் தொழிற்பாடுகள் எவ்வாறு உதவுகின்றது?

**(08 புள்ளிகள்)**

இ. உத்தரவு பெற்ற விசேட வங்கிகள் (Licensed Specialized Banks) பண்புகளையும் வணிகத்திற்கான அவற்றின் பங்களிப்புகளையும் விளக்குக.

**(09 புள்ளிகள்)**

**(மொத்த புள்ளிகள் 25)**

03. அ. கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையினால் இலங்கையின் பொருளாதாரத்திற்கான முக்கியத்துவத்தினை விபரிக்க.

(07 புள்ளிகள்)

ஆ. கொழும்பு பங்குப்பரிவர்த்தனையினால் கணிப்பிடப்படும் விலைச்சுட்டிகளை விளக்குக.

(08 புள்ளிகள்)

இ. கொழும்பு பங்குப்பரிவர்த்தனையில் வியாபாரம் செய்யப்படும் பிணைகள் பற்றி சிறு குறிப்பெழுதுக.

(10 புள்ளிகள்)

(மொத்த புள்ளிகள் 25)

04. அ. பங்குகளில் முதலீடு செய்வதனால் கிடைக்கும் நன்மைகள் எவை?

(08 புள்ளிகள்)

ஆ. முறி ஒன்றின் முகப்பெறுமதி ரூ.1,000 வும் அதன் ஆயும் காலம் 30 ஆண்டுகளாகும். கழிவீட்டு வீதம் 10% மாக இருக்கையில் அவ் பூச்சிய நறுக்கு முறியின் பெறுமதி என்ன?

(08 புள்ளிகள்)

இ. ஓர் முதலீட்டாளர் ஒவ்வொரு உரித்துடைய பங்கிற்கும் ரூ.5 பங்கிலாபமாக பெற்றுள்ளார். அவர் எதிர்பார்க்கும் வருவாய் வீதம் 20% ஆகும். பங்கிலாபங்களில் 12% வளர்ச்சியும் எதிர்பார்க்கப்படின், பங்கினது உள்ளார்ந்த பெறுமதியினைக் கணிக்க.

(09 புள்ளிகள்)

(மொத்த புள்ளிகள் 25)